SRI LANKA

இலங்கை கணக்கீட்டு தொழிநுட்பவியலாளர்கள் கழகம்

மட்டம் II பரீட்சை – ஜூலை 2025

(Level II Examination – July 2025)

பரிந்துரைக்கப்பட்ட விடைகள்ள

(204) வணிக முகாமைத்துவம் (BMA)

இலங்கை கணக்கீட்டுத் தொழிநுட்பவியாளர்கள் கழகம்
இல, 640, வென். முறுத்தெட்டுவென ஆனந்த நாகிமி மாவத்தை,
நாரேஹன்பிட்டி, கொழும்பு - 05
தொ.பே - 011 2 559 669

கல்வி மற்றும் பயிற்சி பிரிவின் வெளியீடு

இலங்கை கணக்கீட்டு தொழிநுட்பவியலாளர்கள் கழகம்

மட்டம் II பரீட்சை – ஜூலை 2025

(204) வணிக முகாமைத்துவம்

பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

(மொத்தம் 25 புள்ளிகள்)

பகுதி - A

வினா 01 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்:

1.1 (2)
1.2 (4)
1.3 (4)
1.4 (3)
1.5 (2)

(02 புள்ளி வீதம் 10 புள்ளிகள்)

1.6 வலு
1.7 சிறப்புதேர்ச்சி
1.8 ஆட்சேர்ப்பு
1.9 விற்பனை
1.10 ஒருங்கிணைந்த முறைமை

(01 புள்ளி வீதம் 05 புள்ளிகள்)

1.11
- மேம்பட்ட இலக்குவைத்தல் மற்றும் தொடர்பாடல் - உற்பத்திகளை சரியான வாடிக்கையாளர் தொகுப்பை நோக்கி கொண்டு செல்ல முடியும்.
- அதிகரிக்கும் சந்தை வினைத்திறன் - சந்தைப்படுத்தல் முயற்சிகள் மற்றும் வளங்களை மிகவும் துலங்கல்மிக்க பார்வையாளர்களை நோக்கி செலுத்துவதன் மூலம் வீண்விரயமானது குறைக்கப்படுகிறது.
- அதிக வாடிக்கையாளர் தக்கவைப்பு – பிரத்தியேகமான சந்தைத் துண்டமொன்றின் தேவைகள் மற்றும் விருப்பங்களை பூர்த்தி செய்வதன் மூலம், வணிகங்கள் வாடிக்கையாளர்களையும் அவர்களின் நம்பகத்தன்மையையும் அதிகரிக்க முடியும்.
- வணிகத்தினால் சந்தை இடர்களை குறைத்து கொள்ள முடியும்.
- இலாபத்தன்மையை அதிகரித்தல்.
- போட்டித்தன்மையை அதிகரிக்கிறது.
- வணிகத்தை விரிவுபடுத்தும் திறன். (புவியியல் ரீதியான துண்டமாக்கலைப் பயன்படுத்துதல்.)

(02 புள்ளிகள்)

aat SRI LANKA

1.12 • **சந்தை ஊடுருவல்**: ஏற்கனவே உள்ள உற்பத்திகளை ஏற்கனவே உள்ள சந்தைகளில் வளர்ச்சியடைய செய்தல் (உ-ம்., விலை ஒப்பந்தங்கள், மேம்படுத்தல்கள், அதிக விநியோகம், பயன்பாட்டை அதிகரித்தல், பங்குகளை கையகப்படுத்தல).

• **சந்தை விருத்தி**: ஏற்கனவே உள்ள உற்பத்திகளை புதிய சந்தைகளுக்கு எடுத்துச் செல்லுதல். (உ-ம். புதிய வாடிக்கையாளர் துண்டங்கள், புதிய புவியியல் துண்டங்கள், புதிய வலையமைப்பு).

(02 புள்ளிகள்)

1.13
- திட்டமிட்ட மாற்றம்
- அவசர மாற்றம்
- அதிகரிக்கும் மாற்றம்
- படிமுறை மாற்றம்
- நிலைமாறுகை மாற்றம்
- தந்திரோபாய மாற்றம்
- தொழிற்பாட்டு மாற்றம்

(02 புள்ளிகள்)

1.14 கிரயத் தலைமைத்துவம் என்பது நிறுவனம் தரத்தை ஏற்றுக்கொள்ளத்தக்க மாத்திரத்தில் பேணிக் கொள்வதுடன் போட்டியாளர்களை விட குறைந்த கிரயத்தில் பொருட்களை உற்பத்தி செய்து பரந்த சந்தையில் போட்டி தன்மையை நிலைநாட்டுதல் ஆகும். நிறுவனங்கள் அளவுதிட்ட சிக்கனங்கள், மெலிந்த செயன்முறைகள், நியமமாக்கல், இறுக்கமான கிரயக் கட்டுப்பாடுகள் மற்றும் வினைத்திறனான வழங்கல் சங்கிலிகள் ஆகியவற்றின் மூலம் நிறைவேற்றுகின்றன. இது விலை உணர்திறன் கொண்ட வாடிக்கையாளர்களை வெற்றி கொள்ளவும் போட்டியாளர்களை காட்டிலும் குறைந்த விலையை நிர்ணயம் செய்யவும் (அல்லது ஒத்த விலைகளை நிர்ணயித்து அதிக இலாபம் ஈட்ட) அனுமதிக்கிறது.

(02 புள்ளிகள்)

1.15
- வெளிவாரி ஆட்சேர்ப்புடன் ஒப்பிடுகையில் மிகவும் விரைவாகவும் குறைந்த கிரயத்துடனும் வெற்றிடங்களை நிரப்ப முடியும்.
- தெளிவான பணித் தொடர்ச்சியை வெளிப்படுத்துவதன் மூலம் பொருத்தமான ஊழியர்களைத் தக்க வைத்துக் கொள்ளல்.
- அறியப்பட்ட செயற்திறன் மற்றும் கலாச்சார பொருத்தப்பாடு காணப்படல்.
- சிறந்த ஊழியர் - முகாமை உறவைப் பராமரிக்க உதவுகிறது.
- தற்போதைய ஊழியர்களின் மன உறுதியை ஊக்குவிக்கவும் மேம்படுத்தவும் உதவுகிறது.

(02 புள்ளிகள்)
(மொத்தம் 25 புள்ளிகள்)

பிரிவு A முடிவு

aat SRI LANKA

வினா 02 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்:

அலகு 1 – முகாமைத்துவத்துக்கான அறிமுகம் மற்றும் முகாமைத்துவத்தின் வேறுபட்ட கண்ணோட்டங்கள்
அலகு 2 – முகாமை செயன்முறையின் தொழிற்பாடுகள்

(a) **தொழிநுட்பத் திறன்கள்**

தொழிநுட்பத் திறன்கள் என்பது ஒரு குறிப்பிட்ட துறையில் குறிப்பிட்ட பணிகளுக்குத் தேவையான நிபுணத்துவ அறிவு, நுட்பங்கள் மற்றும் கருவிகளைப் பயன்படுத்தும் திறன்களைக் குறிக்கிறது. மென்பொருளைப் பயன்படுத்துதல், இயந்திரங்களை இயக்குதல் அல்லது தரவு முறைமைகளை கையாளுதல் போன்ற பணி சார்ந்த செயற்பாடுகளைப் புரிந்துகொள்வதற்கும் செயற்படுத்துவதற்கும் இந்தத் திறன்கள் அவசியமாகும்.

நபர்சார் திறன்கள்:

நபர்சார் திறன்கள் என்பது மற்றவர்களுடன் வினைத்திறனான முறையில் தொடர்புபடல், தொடர்பாடல்களை மேற்கொள்ளல் மற்றும் பணியாற்றுவதற்கான திறனை உள்ளடக்கியது. இந்தத் திறன்களில் குழுப்பணி, தலைமைத்துவம், புரிந்துணர்வு மற்றும் பிணக்குத் தீர்த்தல் ஆகியவை உள்ளடங்குகிறது. இது முகாமையாளர்கள் வலுவான உறவுகளை உருவாக்கவும் நேர்க்கணிய பணிச்சூழலைப் பேணவும் உதவுகிறது.

எண்ணக்கருத் திறன்கள்:

எண்ணக்கருத் திறன்கள் என்பது சுருக்கமாக சிந்திக்கவும், சிக்கலான சூழ்நிலைகளைப் புரிந்துகொள்ளவும், தந்திரோபாயத் திட்டங்களை உருவாக்குவதற்குமான திறன் ஆகும். இத் திறன்கள் முகாமையாளர்கள் நிறுவனத்தை கவனித்து கொள்ளவும் சிக்கல்களை பகுப்பாய்வு செய்யவும், நீண்டகால இலக்குகள் மற்றும் ஒட்டுமொத்த வணிகத் தந்திரோபாயத்துடன் ஒத்துப்போகும் தீர்மானங்களை மேற்கொள்ளவும் உதவுகின்றன.

(இரண்டு திறன்கள் மாத்திரம் எதிர்பார்க்கபடுகிறது.)
(04 புள்ளிகள்)

(b)
- தொழில்முனைவோர்
- பேரம்பேசுபவர்
- வள ஒதுக்கீட்டாளர்
- இடையூறு கையாளுபவர்

(இரண்டு தீர்மான வகிபாகங்களை மாத்திரமே எதிர்பார்க்கலாம்)
(02 புள்ளிகள்)

(c)
- வேகமாக வளர்ச்சியடையும் சூழலில் எதிர்கொள்ளும் நேர அழுத்தம்.
- முழுமையற்ற அல்லது தெளிவற்ற தகவல் (நிச்சயமற்ற கேள்வி, தொழிநுட்ப மாற்றங்கள்).
- அறிவாற்றல் தடைகள் (உறுதிப்படுத்தல் அல்லது நிலைநிறுத்தல்).
- புறநிலை மதிப்பீட்டைக் கட்டுப்படுத்தும் மறைமுகமான தொடர்பு அல்லது அரசியல்.
- தீர்மானம் முழுமையாக சுயாதீனமாக இருக்க முடியாமை.
- வரையறுக்கப்பட்ட பகுத்தறிவு.
- திருப்திக்காக மாத்திரமே தீர்மானங்களை மேற்கொள்ளல்.
- தீர்மானமெடுப்பவரின் வரையறுக்கப்பட்ட திறன்.
- பொதுப்படைத்தன்மை
- ஹாலோ விளைவு
- பரீட்சார்த்தக் கோட்பாடு

(நான்கு தடைகள் மாத்திரமே எதிர்பார்க்கப்படுகிறது)

(04 புள்ளிகள்)
(மொத்தம் 10 புள்ளிகள்)

வினா 03 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்:

அலகு 2 – முகாமை செயன்முறையின் தொழிற்பாடுகள்

(a) திட்டமிடல் செயன்முறையின் படிகள்
- குறிக்கோள்களை உருவாக்குதல்.
- மாற்று வழிமுறைகளை அடையாளம் காணல்.
- மாற்று வழிமுறைகளை மதிப்பீடு செய்தல்.
- மாற்று வழிமுறைகளிலிருந்து சிறந்த ஒன்றை தெரிவு செய்தல்
- நடைமுறைப்படுத்தல்.
- செயற்படுத்தலை பின் தொடர்தல்.

(04 புள்ளிகள்)

(b)
- தந்திரோபாயத் திட்டமிடல்
- செயற்பாட்டுத் திட்டமிடல்
- உபாயத் திட்டமிடல்

(இரண்டு வகையான திட்டமிடல் மாத்திரமே எதிர்பார்க்கப்படுகிறது)
(02 புள்ளிகள்)

(c)
- இலக்கு நிர்ணயம் மற்றும் ஒருமைப்பாடு – தெளிவான SMART குறிக்கோள்களை நிர்ணயித்து அவற்றை வெகுமதிகள் மற்றும் பின்னூட்டல்களுடன் இணைத்தல்.
- அங்கீகாரம் மற்றும் அதிகாரமளித்தல் - சிறந்த செயற்திறனைப் பாராட்டுதல், நியாயமான வெகுமதிகளை வழங்குதல் மற்றும் உரிமையை உருவாக்க அதிகாரத்தை வழங்குதல்.
- நேர்க்கணியப் பணிச்சூழலை உருவாக்குதல். – ஊழியர்களுக்கிடையில் நம்பிக்கை, மதிப்பு மற்றும் வெளிப்படையான தொடர்பை எற்படுத்தக்கூடிய பணிச்சூழலை உருவாக்குவதன் மூலம் ஊழியர்களுக்கிடையில் ஊக்குவிப்பை அதிகரித்தல்.
- வளர்ச்சி மற்றும் அபிவிருத்திக்கான வாய்ப்புகளை வழங்குதல். - பயிற்சி, வழிகாட்டுதல் மற்றும் தொழில் முன்னேற்றத்திற்கான வாய்ப்புகளை வழங்குதன் மூலம் ஊழியர்கள்

SRI LANKA

நிறுவனத்துடன் தாங்கள் எதிர்காலத்தில் முதலீடு செய்யப்பட்ட மதிப்பு மிக்கவர்களாக உணர உதவும்.

- குழுப்பணி மற்றும் ஒத்துழைப்பை ஊக்குவித்தல் - வலுவான தொடர்புகள் மற்றும் குழு மனப்பான்மையை உருவாக்குவதன் மூலம் பணியிடத்தை மேலும் உற்சாகப்படுத்தவும், ஊழியர்களை தாங்கள் சிறந்ததொன்றை செய்ய ஊக்கப்படுத்தவும் உதவுகிறது.
- சுய அதிகாரம் மற்றும் நெகிழ்வுத்தன்மையை அனுமதித்தல் - ஊழியர்களுக்கு அவர்களின் பணியின் மீது சில கட்டுப்பாட்டை வழங்குதல், நெகிழ்வான பணி ஏற்பாடுகள் போன்றவை, அவர்களின் உரிமை மற்றும் உந்துதலை அதிகரிக்கும்.
- குழுப்பணி மற்றும் ஒத்துழைப்பை ஊக்குவித்தல் - உரிமைத்துவ உணர்வையும் தோழமையையும் வளர்ப்பது மிகவும் சுவாரஸ்யமாகவும் ஊக்குவிப்பதாகவும் இருக்கும்.
- முன்மாதிரியாக இருத்தல் - உற்சாகம், அர்ப்பணிப்பு மற்றும் நேர்மையை வெளிப்படுத்தும் முகாமையாளர்கள் தங்கள் குழுவிற்கு ஒரு நேர்மறையான முன்மாதிரியை உருவாக்குகின்றார்கள்.
- தொடர்ச்சியான பின்னூட்டல்கள் மற்றும் பயிற்சியை வழங்குதல் - பின்னூட்டல் மற்றும் பயிற்சியை உருவாக்குதல் ஊழியர்கள் தங்கள் வளர்ச்சியில் மேம்படவும் ஆதரவளிக்கவும் உதவும்.
- தனிப்பட்ட வேலையை விரிவான நோக்குடன் இணைத்தல். - நிறுவனத்தின் நோக்கம் மற்றும் இலக்குகளுக்கு ஊழியர்களின் பணி எவ்வாறு பங்களிக்கிறது என்பதைப் பரிசீலிக்க ஊழியர்களுக்கு உதவுதல் அவர்களின் நோக்கம் மற்றும் உந்துதலை அதிகரிக்கும்.

(இரண்டு வகிபாகங்கள் மாத்திரமே எதிர்பார்க்கபடுகிறது.)

(04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

வினா 04 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்:

அலகு 03 – தொழிற்பாட்டு முறைமை
அலகு 05 – மனிதவள முகாமை
அலகு 02 – முகாமை செயன்முறைமையின் தொழிற்பாடுகள்

(a)

- மன உறுதியையும் ஈடுபாட்டையும் மேம்படுத்தி கொள்ள.
- தொழில்தருனா் அடையாளம் மற்றும் தக்க வைப்பு - ஊழியர் வெளியேற்றத்தை குறைத்தல், திறமையை ஈர்த்தல்.
- உற்பத்தித்திறன் மற்றும் நல்வாழ்வை அதிகரிக்க- குறைவான குறைகள், பாதுகாப்பான அல்லது ஆரோக்கியமான ஊழியர்கள்.
- நிறுவனத்திற்கு ஊழியர்களின் விசுவாசத்தை அதிகரிக்க.
- ஆட்சேர்ப்பு செயற்பாட்டை மிகவும் வெற்றிகரமாக மாற்றுவதற்கு.
- ஊழியர்களின் வருகையின்மையைக் குறைக்க.

(மூன்று நன்மைகளை மாத்திரமே எதிர்பார்க்கப்படுகிறது)

(03 புள்ளிகள்)

aat SRI LANKA

(b) **(i)** வழங்கல் சங்கிலி முகாமை

- வணிகம் அதன் நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு தேவையான பொருட்களைப் பெற்றுகொள்வதை உறுதிசெய்ய வழங்குனருடனான உறவுகள் மற்றும் தொடர்புடைய அம்சங்களை நிர்வகித்தல்.
- வழங்குர்களை தேர்ந்தெடுத்து உருவாக்குதல், SLAகளை தெளிவுபடுத்துதல், கூட்டு முன்னறிவிப்பு.
- சிறப்பான முறையில் இருப்புக்களை திட்டமிடுதல் (EOQ/JIT) செலவு எதிர் சேவை மட்டம்.
- ERP உடன் பாய்ச்சல்களை (பொருட்கள்/தகவல் /காசு) ஒருங்கிணைத்தல் OTIF, முதன்மைக்காலம், இருப்பு மட்டங்களைக் கண்காணித்தல்.
- இடர் முகாமை: இரட்டை வழங்கல், முக்கியத்துவம் வாய்ந்த உருப்படிகளுக்கான பாதுகாப்பு இருப்பு.

(ii) தர முகாமை

- வேலையின் ஒவ்வொரு செயன்முறையையும் அவற்றின் வெளியீடுகளையும் கண்காணித்து, உற்பத்திகள் தேவையான தர மட்டங்களில் வெளியிடப்படுவதை உறுதிசெய்தல்.
- நியமங்கள் மற்றும் SOPகளை நிர்ணயித்தல் ஊழியர்களுக்கு பயிற்சி அளித்தல், செயன்முறைகள் முழுவதும் QC/QA ஐ உட்பொதித்தல்.
- SPC மற்றும் கணக்காய்வுகளுடன் அளவிடவும் சிக்கல்களை சரிசெய்ய PDCA/root-cause (5 Whys/Fishbone) ஐப் பயன்படுத்தல்.
- வாடிக்கையாளர்களிடமிருந்தான தொடர்ச்சியான பின்னூட்டல்கள், குறைபாடுகளைத் தடுப்பதன் மூலம் அவற்றைக் கண்டறிவது மாத்திரமல்லாமல் தொடர்ச்சியான முன்னேற்றத்தை (Kaizen) இயக்குகின்றன.

(05 புள்ளிகள்)

(c)

தலைவர்	முகாமையாளர்
மக்கள் மற்றும் தூரநோக்கில் கவனம்	செயற்பாடு மற்றும் பணியில் கவனம்
ஊக்குவிப்பு மற்றும் கூட்டு அணுகுமுறையை பயன்படுத்தல்.	வழிநடத்தல் மற்றும் கட்டுப்பாட்டு அணுகுமுறையை பயன்படுத்தல்
இடர்களை ஏற்றுகொள்ளல் மற்றும் புத்தாக்க தீர்மானமெடுத்தல்	நடைமுறை மற்றும் செயற்பாட்டு ரீதியான தீர்மானமெடுத்தல்
ஊக்கப்படுத்தல் வகிபாகம் மூலம் ஊழியர்கள் மீது செல்வாக்கினை ஏற்படுத்தல்	குறிப்பிட்ட விடயத்தை செயற்படுத்த ஊழியர்கள் மீது சர்வாதிகார பாங்கினை பயன்படுத்துபவர்கள்.
பின்பற்றுபவர்களை உருவாக்குபவர்கள்	கீழ்மட்டத்தை உருவாக்குபவர்கள்
மக்களுடன் அதிகாரத்தை வளர்த்து கொள்பவர்கள்	மக்கள் மீது அதிகாரத்தை பிரயோகிப்பவர்கள்
சிறந்த சிந்தனைகளை செயற்படுத்துதல் மற்றும் அதனை வெளிப்படுத்தி மற்றவர்களையும் பின்பற்ற செய்தல்.	சிறந்த சிந்தனைகளை கொண்டிருப்பதுடன் அதனை மற்றவர்களும் பின்பற்றுமாறு கேட்பவர்கள்.
என்ன செய்ய வேண்டும் எப்படி செய்ய வேண்டும் என்பதை வெளிப்படுத்துவர்.	என்ன செய்ய வேண்டும் என்பதனை கூறுவர்.

aat SRI LANKA

பின்பற்றுபவர்களின் வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்துவர்.	பணிச்சூழலில் ஏற்படும் மாற்றங்களுக்கு எதிர் வினையாற்றுவர்.
அவர்களின் வாழ்க்கையில் அவர்களை சுற்றியுள்ளவர்களைக் கதாநாயகர்களாக உருவாக்குவர்.	நிறுவனத்தில் தலைவராக இருக்க முயற்சி செய்வர்.

(02 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

வினா 05 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்:

அலகு 02 - முகாமை செயன்முறையின் தொழிற்பாடுகள்
அலகு 05 - மனிதவள முகாமை

(a) **உடலியல் (பௌதீக) தேவைகள்**: மனிதனுக்கு இயற்கையாக எழக்கூடிய, அவர்களின் வாழ்வாதாரத்தில் திருப்தி அடைவதற்கு முதன்மையானதாக வெளிப்படுபவை தேவைகள் ஆகும். (பசி, தாகம், உறையுள், பாலியல், மற்றும் பிற உடலியல் தேவைகள்)

பாதுகாப்புத் தேவைகள்: உடல் மற்றும் உள நலனுக்கு தீங்கு விளைவிக்கும் காரணிகளிலிருந்து பாதுகாக்கப்பட வேண்டியவை மனிதர்களின் பாதுகாப்புத் தேவைகள் ஆகும். (வேலைப் பாதுகாப்பு, தெளிவான கொள்கைகள், பாதுகாப்பான/பணிச்சூழல் பணியிடம், நன்மைகள்.)

சமூக (உடமை) தேவைகள்: மக்கள் தங்கள் அங்கீகாரம், உணர்ச்சி மற்றும் வாழ்க்கை முறைகளைப் பகிர்ந்து கொள்ளும் ஒரு சமூகத்தின் உறுப்பினர்களாக உணர வேண்டிய தேவைகள். (கூட்டுறவு குழுக்கள், ஆதரவான கலாச்சாரம், குழு நிகழ்வுகள்.)

கௌரவத் தேவை: அவர்கள் யார், அவர்கள் என்ன செய்கிறார்கள் மற்றும் அவர்களின் சிறப்புகள் ஆகியவற்றின் அடிப்படையில் மற்றவர்களிடையே ஒரு தனித்துவத்தைக் கொண்டிருக்க வேண்டும் என்ற அடிப்படையிலான தேவைகள். (செயற்பாடுகளுக்கான அங்கீகாரம் மற்றும் வெகுமதிகள், பதவி உயர்வு, அர்த்தமுள்ள சுயநிர்ணயம்.)

சுய அடைவுத் தேவை: மனிதன் தனது நீண்டகாலத்தில் பூர்த்தி செய்ய வேண்டிய அபிலாசைகளான அர்த்தமுள்ள வாழ்க்கை முறை, நீண்ட கால இலக்குகளை நிறைவு செய்தல் மற்றும் வாழ்நாள் இலட்சியங்கள் போன்றவற்றை உள்ளடக்கிய தேவை ஆகும். (படைப்பு சுதந்திரம், சவாலான சுருக்கங்கள், கற்றல் மற்றும் தொழில் வளர்ச்சி.)

(இரண்டு தேவைகள் மாத்திரமே எதிர்பார்க்கப்படுகிறது)

(03 புள்ளிகள்)

(b) (i) **நிறுவன இலக்குகளை அடைவதில் உதவுதல்.**
நிறுவனத்தின் செயற்பாடுகள் திட்டத்திற்கு அமைவாக உள்ளதா என்பதை உறுதிசெய்வதுடன் வேறுபாடுகள் காணப்படுமிடத்து அவற்றை கண்டறிந்து சரிசெய்வதன் மூலம் இலக்குகளை திறம்பட அடைந்து கொள்ள உதவுகிறது.

(ii) **நியமங்களின் துல்லியத்தை மதிப்பிடுதல்**
நிர்ணயிக்கப்பட்ட நியமங்கள் துல்லியமானவையா என்பதை மதிப்பிட உதவுகிறது மற்றும் வணிக சூழல் மாற்றத்திற்கமைய கட்டுப்பாட்டு முறைமை சரியான நேரத்தில் திருத்தங்களை அனுமதிக்கின்றதா என்பதைக் கண்டறிகிறது.

aat SRI LANKA

(iii) வளங்களை வினைத்திறனான முறையில் பயன்படுத்துதல்

நிர்ணயிக்கப்பட்ட நியமங்களின்படி செயற்பாடுகளை வழிநடத்துவதன் மூலம், வளங்களில் இருந்து உச்ச மற்றும் வினைத்திறனான பயன்பாட்டை பெறுவதை உறுதி செய்கிறது.

(iv) ஊழியர்களின் ஊக்கப்படுத்தலை மேம்படுத்துதல்

கட்டுப்பாட்டில் உள்ள இலக்குகள் மற்றும் துணை முறைமைகள் தொடர்பான தெளிவான தொடர்பாடல் ஊழியர்களின் உந்துதலையும் செயற்திறனையும் அதிகரிக்கிறது.

(v) ஒழுங்கு மற்றும் ஒழுக்கத்தை உறுதி செய்கிறது

கட்டுப்பாடு ஊழியர்களை பொறுப்புக்கூற வைப்பதன் மூலமும், எந்தவொரு நேர்மையின்மை, மோசடி அல்லது திறமையின்மையையும் கண்டறிவதன் மூலமும் ஒழுக்கத்தைப் பேணுகிறது.

(vi) செயற்பாட்டில் ஒருங்கிணைப்பை எளிதாக்குகிறது

கட்டுப்பாடு நிறுவனத்தின் ஒவ்வொரு திணைக்களங்களின் செயற்பாடுகளை ஒட்டுமொத்த இலக்குகளுடன் சீரமைக்கிறது, சீரான ஒருங்கிணைப்பு மற்றும் தனித்துவமான திசைமுகப்படுத்தலை உறுதி செய்கிறது.

(vii) ஊழியர்களின் செயற்திறனை மேம்படுத்துகிறது

கட்டுப்பாட்டு தொழிற்பாட்டின் கீழ் ஊழியர்கள் தமது கடமைகள் மற்றும் பொறுப்புக்களை மிகவும் தெளிவாக அறிந்து கொள்வதனை உறுதி செய்யமுடிகிறது. அத்தோடு வழக்கமான ஆய்வுகள் மற்றும் பின்னூட்டங்கள் மூலம் ஊழியர்கள் திறமையாக வேலை செய்ய உதவுகிறது:

(viii) தவறுகளை குறைக்கிறது

கட்டுப்பாடானது தொடர்ச்சியாக செயற்பாடுகளை கண்காணிப்பதன் ஊடாக தவறுகளை முன் கூட்டியே கண்டறிந்து திருத்துவதன் மூலம் பாரிய விளைவுகளை தடுக்கிறது.

(05 புள்ளிகள்)

aat SRI LANKA

(c)
- குறைவான தவறுகள் மற்றும் விரைவான தீர்மானங்கள்
- சிறந்த ஒருங்கிணைப்பு மற்றும் மன உறுதி
- அக்கறைதாரருடனான உறவினை வினைத்திறனாக பராமரித்தல்.
- தொழில்சார் அடையாளத்தை மேம்படுத்தல்.
- முரண்பாடுகளை குறைத்தல்.
- நிறுவன கலாச்சாரத்தை மேம்படுத்தல்.
- வினைத்திறனான முறையில் சிக்கல்களை தீர்த்தல்.
- வினைத்திறனான தீர்மானம் மேற்கொள்ளல்.
- ஊக்கப்படுத்தல் மூலம் உற்பத்தித்திறனை அதிகரித்தல்.
- நிறுவன வெளிப்படைத்தன்மை, நம்பிக்கை மற்றும் உறுதித்தன்மை அதிகரித்தல்.
- ஒரு நிறுவனத்தில் சீரான செயற்பாடு

(இரண்டு நன்மைகள் மாத்திரம் எதிர்பார்க்கப்படுகிறது.)

(02 புள்ளிகள்)
(மொத்தம் 10 புள்ளிகள்)

வினா 06 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :

அலகு 02 – முகாமை செயன்முறையின் தொழிற்பாடுகள்
அலகு 03 – செயற்பாட்டு முகாமை
அலகு 06 – மாற்ற முகாமை
அலகு 07 – தந்திரோபாய முகாமைக்கான அறிமுகம்

(a)
- செயற்திறன், உற்பத்தித்திறன் மற்றும் தர நிலைத்தன்மையை அதிகரித்தல்
- இலாபத்தை அதிகரித்தல்
- கிரயத்தைக் குறைத்தல்
- சந்தை பங்கை அதிகரித்தல்
- செயற்பாடுகளின் தன்னியக்கம்
- மேம்படுத்தப்பட்ட ஒருங்கிணைந்த செயற்பாடு
- தரவு சார்ந்த நுண்ணறிவுகள்
- வாடிக்கையாளர் தேவையில் அதிக நெகிழ்வுத்தன்மை

(இரண்டு தாக்கங்களை மாத்திரமே எதிர்பார்க்கலாம்)
(02 புள்ளிகள்)

(b)
- தெளிவான மற்றும் நேரகாலத்துடனான தொடர்பாடல்: நோக்கம், நன்மைகள், வகிபங்கின் தாக்கம்.
- உரிமைத்துவத்தை உருவாக்க மாதிரி அல்லது பின்னூட்டங்களில் ஊழியர்களை ஈடுபடுத்துதல்.
- பயிற்சி மற்றும் ஆதரவு - நேரடி பயிலரங்குகள், பயிற்சி, உதவி மையம்.
- பின்பற்றுனர்களை அங்கீகரித்து வெகுமதி அளித்தல் - விரைவான வெற்றிகள், பொது பாராட்டு, ஊக்கத்தொகைகள்.
- பொறுப்புக்கூறலுக்கு இடமளித்தல்
- பங்களிப்பு மற்றும் முதலீடு
- திறந்த தொடர்பாடல் வழிகளை கொண்டிருத்தல்.
- மாற்றத்தை ஏற்றுக்கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்த தெளிவான திட்டங்களை கொண்டிருத்தல்
- நடைமுறைக்கு உகந்ததாக இருத்தல்.

(நான்கு வழிகளை மாத்திரம் எதிர்பார்க்கப்படுகிறது)
(04 புள்ளிகள்)

(c) நிலைமாற்றத் தலைவர்கள் நீண்ட காலத்திற்கு அவர்களுக்கு பயனளிக்ககூடியதாக தங்களைப் பின்தொடர்பவர்களில் மாற்றத்திற்கான தேவையைக் காணக்கூடிய தலைவர்கள் ஆவர். நிலைமாற்றத் தலைமைத்துவத்தின் கூறுகள் / அம்சங்கள் பின்வருமாறு.

- தொலைநோக்கு மற்றும் உத்வேகம்: CEO/முகாமையாளர்கள் AI தொழிநுட்பத்தின் கட்டாயமான எதிர்கால தேவைப்பாட்டினை நிறுவன தந்திரோபாயத்துடன் இணைத்து விளக்குகிறார்கள்.
- அறிவுசார் தூண்டுதல்: புதிய பணிப்பாய்வுகளுடன் ஆராய்ச்சி/சிக்கலைத் தீர்க்க குழுக்களை ஊக்குவித்தல்.

aat SRI LANKA

- தனித்தனியான கவனிப்பு: பயிற்சியாளர் மற்றும் வழிகாட்டி எதிர்ப்பாளர்கள் தேவைகளுக்கு ஏற்ப பயிற்சி.
- முன் மாதிரியானவர்கள் (சிறந்த செல்வாக்கு): தலைவர்கள் முதலில் கருவிகளைப் பயன்படுத்துகிறார்கள், நெறிமுறைகளை நிரூபிக்கிறார்கள், நம்பிக்கையை உருவாக்குகிறார்கள் - பயத்தைக் குறைக்கிறார்கள் அதன்மூலம் வசப்படுத்தலை அதிகரிக்கிறார்கள்.
- தனிநபர் மற்றும் குழு மேம்பாடு: நிலைமாற்றத் தலைவர்கள் தங்கள் பின்தொடர்பவர்களின் தனிப்பட்ட மற்றும் தொழில் வளர்ச்சியில் கவனம் செலுத்துகிறார்கள்.
- நிறுவன மாற்றம் மற்றும் நிலைமாற்றம்: நிறுவனத்தில் மாற்ற முயற்சிகளை வழிநடத்துவதில் நிலைமாற்றத் தலைமை மிக முக்கியமானது, இது முரண்பாடுகளை குறைக்கவும் ஊழியர்களிடையே அர்ப்பணிப்பை வளர்க்கவும் உதவுகிறது.
- ஊழியர்களின் ஈடுபாடு மற்றும் உந்துதல்: நோக்கம் மற்றும் கடந்தகால உணர்வை ஊக்குவிப்பதன் மூலம் நேர்மறையான பணிச்சூழல் மாற்றத்தை ஏற்படுத்தும் தலைவர்கள் ஊழியர்களின் ஈடுபாட்டையும் திருப்தியையும் அதிகரிக்கிறார்கள்.
- நேர்க்கணிய பணியிட கலாச்சாரம்: நம்பிக்கையான திறந்த தொடர்பாடல் மற்றும் பகிரப்பட்ட நோக்க உணர்வை உருவாக்குவதன் மூலம், மாற்றத்தை ஏற்படுத்தும் தலைமை நேர்மறையான மற்றும் ஆதரவான பணியிட கலாச்சாரத்திற்கு பங்களிக்கிறது.

நிலைமாற்ற தலைமைத்துவத்திலிருந்து வரையறுக்கப்பட்ட MMC நிறுவனமானது பல நன்மைகளைப் பெற்றுகொள்ள முடியும் என்பதால், நிலைமாற்ற தலைமைத்துவ கோட்பாடானது MMC நிறுவனத்திற்கு பொருத்தப்பாடுடையதாக காணப்படுகிறது.

SRI LANKA

(04 புள்ளிகள்)
(மொத்தம் 10 புள்ளிகள்)

பிரிவு B முடிவு

(மொத்தம் 25 புள்ளிகள்) **பிரிவு - C**

வினா 07 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்:

அலகு 04 – சந்தைப்படுத்தல் முகாமை

(a)

- **தேடுபொறி சந்தைப்படுத்தல் (SEO + Google விளம்பரங்கள்):** தேடுபொறி உகப்பாக்கம் என்பது ஒரு வலைத்தளத்தை மேம்படுத்தும் செயன்முறையாகும், அது தேடல் முடிவுகளில் உயர்ந்த இடத்தைப் பிடிக்கிறது, முதலிடத்தில் உள்ள உற்பத்திகள் அல்லது பக்கங்கள் முதலில் தோன்றி அதிக இலவச (கட்டணம் செலுத்தப்படாத) போக்குவரத்தை கவர உதவுகிறது. (அதிக நோக்கமுள்ள வாங்குபவர்களைப் பிடிக்கவும் முக்கிய வார்த்தைகளை மேம்படுத்தவும், முன்னுரிமை SKU களுக்கு PPC ஐ இயக்கவும், வண்டிகளை மீட்டெடுக்க மறு சந்தைப்படுத்தலைப் பயன்படுத்தும்.)

- **சமூக ஊடக சந்தைப்படுத்தல் (கட்டணம் செலுத்திய + இயற்கை + செல்வாக்கு செலுத்துபவர்கள்):** சமூக ஊடக சந்தைப்படுத்தல் என்பது உற்பத்திகள் அல்லது சேவைகளை விளம்பரப்படுத்தவும், வாடிக்கையாளர்களுடன் ஈடுபடவும், பதிவுகள், விளம்பரங்கள் மற்றும் தொடர்புகள் மூலம் வியாபாரகுறி தொடர்பான விழிப்புணர்வை உருவாக்கவும் சமூக ஊடக தளங்களைப் பயன்படுத்துவதாகும். (FB/IG/TikTok/YouTube இல் இலக்கு பிரிவுகள் மாற்று விளம்பரங்கள், UGC/செல்வாக்கு செலுத்துபவர்கள் மற்றும் சமூக கடை அம்சங்களை செயற்படுத்தல்.)

- **மின்னஞ்சல் / குறுஞ்செய்தி / WhatsApp / CRM**: வாடிக்கையாளர்களை ஈடுபடுத்தவும், உற்பத்திகளை விளம்பரப்படுத்தவும், சரியான நேரத்தில் மற்றும் பொருத்தமான தொடர்பாடல்களை வழங்குவதன் மூலம் வலுவான உறவுகளை உருவாக்கவும் குறிப்பிட்ட வலையமைப்புக்கள் மூலம் அனுப்பப்படும் தனிப்பயனாக்கப்பட்ட செய்திகளைப் பயன்படுத்தவும் முடிகிறது. (தனிப்பயனாக்கப்பட்ட சலுகைகள், வாழ்க்கைச் சுழற்சி ஓட்டங்கள் (வரவேற்பு, வண்டி கைவிடுதல், வெற்றி-திரும்பப் பெறுதல்), சம்பள சுழற்சிகள் / திருவிழாக்களுக்கு ஏற்றவாறான விளம்பரங்கள்.)

- **உள்ளடக்க சந்தைப்படுத்தல்**: உள்ளடக்க சந்தைப்படுத்தல் என்பது மதிப்புமிக்க, தொடர்புடைய மற்றும் சீரான உள்ளடக்கத்தை உருவாக்கி பகிர்ந்து கொள்வதில் கவனம் செலுத்தும் ஒரு தந்திரோபாய அணுகுமுறையாகும், இதன் மூலம் குறிப்பிட்ட இலாபகரமான வாடிக்கையாளர்களை கவரவும் தக்கவைத்து கொள்ளவும் முடியும்.

- **தானியங்கு சந்தைப்படுத்தல்:** மின்னஞ்சல்களை அனுப்புதல், சக ஊடகங்களில் பதிவு செய்தல் மற்றும் பணிகளை நிர்வகித்தல் போன்ற தொடர்ச்சியான சந்தைப்படுத்தல் பணிகளை மேற்கொள்ள தானியங்கு சந்தைப்படுத்தலானது மென்பொருளை பயன்படுத்துகிறது இந்த மென்பொருள் வணிகங்கள் வாடிக்கையாளர்களை மிகவும் திறமையாக ஈடுபடுத்த உதவுகின்றன.

aat SRI LANKA

- **நிகழ்நிலை PR**: நிகழ்நிலை PR என்பது எண்முறை வெளியீடுகள், வலைப்பதிவுகள் மற்றும் பிற உள்ளடக்க அடிப்படையிலான வலைத்தளங்கள் மூலம் வருமானத்தை ஈட்ட நிகழ்நிலை செய்திகளை பரப்புவதற்கான நடைமுறையாகும். இது பாரம்பரிய PR போன்றது, ஆனால் நிகழ்நிலை இடைவெளியை உடையது.

(மூன்று முறைகளை மாத்திரமே எதிர்பார்க்கலாம்)
(06 புள்ளிகள்)

(b)

அத்தியாயம் 04 – சந்தைப்படுத்தல் முகாமைத்துவம்

- **வாடிக்கையாளர் விசுவாசம்**

  ஒரு நிறுவனமானது அதன் சந்தைப்படுத்தல் செயற்பாட்டில் நேர்மையாகவும் வெளிப்படையாகவும் செயற்படுமிடத்து, வாடிக்கையாளர்கள் அதை அதிகமாக நம்புகிறார்கள். நெறிமுறை நடைமுறைகள் - உண்மையான தயாரிப்புகளைக் காண்பித்தல் மற்றும் வாக்குறுதியளித்தபடி வழங்குதல் போன்றவை, நீண்டகால வாடிக்கையாளர் விசுவாசத்தை உருவாக்குகின்றன.

- **நீண்ட கால இலாபம்**

  நெறிமுறை சந்தைப்படுத்தலைப் பின்பற்றுவது நிறுவனத்தின் இலக்குகளை அடைவது மாத்திரமல்லாமல், விசுவாசமான வாடிக்கையாளர்கள், வலுவான சந்தை நற்பெயர், விற்பனை அதிகரிப்பு மற்றும் அதிக வருவாய் போன்ற நீடித்த நன்மைகளைத் தருகிறது. இது நிறுவனம் குறுகிய காலத்திலும் நீண்ட காலத்திலும் வளர்ச்சியடைய உதவுகிறது.

- **நம்பகத்தன்மையை உருவாக்குதல்.**

  சந்தைப்படுத்தலில் நிலையான நெறிமுறையை பின்பற்றும் போது நிறுவனம் ஒரு உண்மையான மற்றும் நம்பகரமான வணிகப்பெயருடன் தனித்து நிற்க உதவுகிறது. காலப்போக்கில், இது தொழில்துறைக்குள்ளும் நுகர்வோர் மத்தியிலும் நம்பிக்கையையும் நம்பகத்தன்மையையும் உருவாக்குகிறது.

- **அடிப்படை மனிதத் தேவைகளைப் பூர்த்தி செய்தல்.**

  நெறிமுறை சந்தைப்படுத்தல் வாடிக்கையாளர்களின் உளரீதியான தேவைகளைப் பூர்த்தி செய்கிறது. உ-ம்: நம்பிக்கை, நேர்மை மற்றும் ஒருமைப்பாடு. இத் தேவைகள் பூர்த்தி செய்யப்படும்போது, வாடிக்கையாளர்கள் விசுவாசமாக இருந்து மற்றவர்களுக்கு வணிகப்பெயர் தொடர்பாக பரிந்துரைக்க அதிக வாய்ப்புள்ளது.

- **திறமையை ஈர்த்தல்.**

  நிறுவன நெறிமுறைகள் திறமையான நிபுணர்கள், வழங்குனர்கள் மற்றும் ஆலோசகர்களுக்கு மிகவும் கவர்ச்சிகரமானதாக காணப்படுவதுடன் மக்கள் நம்பகமான வணிகப்பெயருடனான நிறுவனத்துடன் தொடர்புடையவர்களாக இருக்க விரும்புகிறார்கள், இது வணிகம் ஒரு வலுவான, அதிக அர்ப்பணிப்புள்ள குழுவை உருவாக்க உதவுகிறது.

aat SRI LANKA

- **நிதி இலக்குகளை அடைதல்.**

  முதலீட்டாளர்கள் மற்றும் நிதி பங்காளர்கள் நெறிமுறை நிறுவனங்களை ஆதரிக்க விரும்புகிறார்கள். நேர்மையான சந்தைப்படுத்தல் நடைமுறைகளைப் பேணுவதன் மூலம், வணிகங்கள் செயற்பாடுகளை விரிவுபடுத்துவதற்கும் புதிய முயற்சிகளை மேற்கொள்வதற்கும் நிதியைப் பெற அதிக வாய்ப்புள்ளது.

- **மேம்படுத்தப்பட்ட வியாபாரபெயர் பெறுமதி**

  சந்தைப்படுத்தல் நெறிமுறை நிறுவனத்தின் நற்பெயரை மேம்படுத்துகிறது, இது சந்தையில் மதிப்பிற்குரிய மற்றும் நம்பகமான பெயராக அமைவதுடன் போட்டி நன்மைகளை உருவாக்குவதன் மூலம் வணிகப்பெயரின் நன்மதிப்பை அதிகரிக்கிறது.

(மூன்று காரணங்களை மாத்திரம் எதிர்பார்க்கப்படுகிறது)

(06 புள்ளிகள்)

(c)

அத்தியாயம் 05 – மனிதவள முகாமைத்துவம்

- பணவீக்கத்திற்கான இழப்பீடு / நன்மைகள், இலக்கு வைக்கப்பட்ட வெகுமதிகளின் ஒதுக்கு ஆகியவற்றை சரிசெய்தல்.
- தெளிவான விருத்தி மற்றும் பயிற்சியுடன் தொழில் விருத்தி அல்லது உள்முக இயக்கம்.
- அங்கீகாரம் மற்றும் நியாயமான செயற்திறன் முகாமை (தெளிவான இலக்குகள், கருத்து).
- நெகிழ்வான/கலப்பின வேலை மற்றும் நல்வாழ்வுக்கான ஆதரவு (சுகாதாரம், EAP வேலை–பணிச் சமநிலை).
- பணி மற்றும் வாழ்க்கை சமநிலை.
- சிறந்த அல்லது நேர்க்கணிய பணிச்சூழலை உருவாக்குதல்.
- திறந்த தொடர்பாடல்
- தொழில்சார் மேம்பாட்டில் முதலீடு செய்தல்.
- பயிற்சி மற்றும் அபிவிருத்தி.

(நான்கு வழிகளை மாத்திரம் எதிர்பார்க்கலாம்

(04 புள்ளிகள்)

aat SRI LANKA

(d)

அத்தியாயம் 05 – மனிதவள முகாமைத்துவம்

- சரியான திறமையுள்ளவர்களை ஈர்த்தெடுத்தல் மற்றும் தெரிவு செய்தல்.
- பயிற்சி மற்றும் கற்றல் செயற்பாட்டின் மூலம் திறன்களை வளர்த்துக் கொள்ளல்
- வெகுமதிகள் மற்றும் பங்களிப்பு மூலம் ஊக்குவித்து தக்கவைத்துக்கொள்ளல்.
- இணக்கம் மற்றும் நல் உறவுகளை (தொழிலாளர் சட்டம், பாதுகாப்பு) உறுதி செய்தல்.
- நிறுவனம் அதன் நோக்கங்களை அடைய உதவுதல்.
- ஊழியரின் வேலை திருப்தியை அதிகரித்தல்.
- தனிநபர்களின் தேவைகளை அடையாளம் கண்டு பூர்த்தி செய்தல்.
- ஊழியர்களிடையே உயர்ந்த மன உறுதியை ஏற்படுத்தி தொடர்சியாக பேணுதல்
- மனிதர்களுக்கான மதிப்பளித்தலை உறுதி செய்தல்.
- நிறுவனத்தின் இலக்குகளுடன் தனிப்பட்ட இலக்குகளின் பொருத்தப்பாட்டை உறுதி செய்தல்.

- பணி வாழ்க்கையின் தரத்தை பேணுதலும் அதிகரித்து கொள்ளலும்..
- சமூகத்தின் தேவைகளுக்கு நெறிமுறை ரீதியாகவும் சமூக ரீதியாகவும் பதிலளிக்க வேண்டும்.
- ஒவ்வொரு ஊழியரின் ஒட்டுமொத்த ஆளுமையையும் அதன் பல பரிமாண அம்சங்களில் வளர்த்து கொள்ளல்.
- தற்போதைய வேலையைச் செய்வதற்கான ஊழியரின் திறன்களை மேம்படுத்துதல்.
- வணிக கொடுக்கல் வாங்கல்களில் ஊழியர்களை துல்லியம் மற்றும் தெளிவுடன் ஒருமைப்படுத்தல்.
- குழு மனப்பான்மை, குழுப்பணி மற்றும் பயிற்சியாளர்-குழு ஒத்துழைப்பு ஆகியவற்றின் உணர்வை வளர்த்தல்.

(நான்கு நோக்கங்களை மாத்திரம் எதிர்பார்க்கலாம்)

(04 புள்ளிகள்)

(e)

அத்தியாயம் 07 – தந்திரோபாய முகாமைத்துவத்துக்கான அறிமுகம்

1. நிறுவன கலாச்சாரம்:

நிறுவனத்திற்கும் அதன் தொழிற்பாட்டு செயன்முறைகளுக்கும் இடையிலான தொடர்பு நிறுவன கலாச்சார மூல அடிப்படையில் கூறப்படுகிறது. நிறுவன கலாச்சாரம் என்பது ஒரு நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட நடத்தை முறைகளின் தொகுப்பாகும், இது புதிய உறுப்பினர்கள் நிறுவன வெளிப்புற மற்றும் உட்புற சூழல் பிரச்சினைகளை தீர்க்கவும், கவனிக்கவும் சரியான பாதையில் சிந்திக்கவும் புரிந்துகொள்ளவும் உதவுகிறது.

2. முகாமை

இதன் கீழ் முக்கியமாக கவனிக்கப்பட வேண்டியவை பின்வருமாறு.

- நிறுவனம் தந்திரோபாய முகாமை கருத்துக்களைப் பயன்படுத்துகிறதா?
- நிறுவன நோக்கங்களை அளவிட முடியுமா?
- அவை தொடர்பாடல் செய்யப்படுகிறதா?
- நிறுவனக் கட்டமைப்பு பொருத்தமானதா?
- ஊழியர்களின் வருகை விரும்பத்தக்கதா?

3. சந்தைப்படுத்தல்

இது வாடிக்கையாளர் பகுப்பாய்வு, உற்பத்தி திட்டமிடல், விலை நிர்ணயம், விநியோகம், சந்தை ஆராய்ச்சி மற்றும் செலவு நன்மை பகுப்பாய்வு ஆகியன இதன் கீழ் குறித்துரைக்கப்படுகிறது.

- சந்தை பிணைப்பு வெற்றியளிக்கிறதா?
- சந்தை தரம் மேம்படுகின்றதா?
- வழங்கல் சங்கிலியானது பயனுறுதியாகவும் வினைத்திறனாகவும் உள்ளதா?
- உற்பத்தியின் தரம் போதுமானதா?
- சந்தைப்படுத்தல் ஊழியர்களுக்கு போதுமான அனுபவம் உள்ளதா?

aat SRI LANKA

4. நிதி மற்றும் கணக்கியல் காரணிகள்

இதன் கீழ் நிதி நிலையானது குறித்துரைக்கப்படுகிறது. குறிப்பாக, தொழிற்பாட்டு மூலதனம் இலாபதன்மை, சொத்துக்களின் பயன்பாடு, நிதி பாய்ச்சல் மற்றும் மூலதனம் ஆகியவை கருதப்படுகின்றன. இதன் கீழ் பின்வரும் தகவல்களைப் பெற்று கொள்ள முடியும். .

- நிறுவன நிதி நிலை வலுவாக உள்ளதா?
- குறுகிய கால மூலதனத் தேவையை பூர்த்தி செய்ய முடியுமா?
- போதுமான தொழிற்பாட்டு மூலதனம் உள்ளதா?
- முதலீட்டாளர்களுடன் உறவுகள் உள்ளதா?

5. உற்பத்தி மற்றும் செயற்பாடுகள்

இதன் கீழ் உள்ளீடுகள், செயன்முறை மற்றும் வெளியீடுகள் கருத்திற் கொள்ளப்படுகிறது. . பின்வரும் தகவல்கள் சேகரிக்கப்படுகின்றன.

- விநியோகஸ்தர்கள் நம்பகமானவர்களா?
- உள்ளீடுகள், இயந்திரங்கள் மற்றும் வசதிகள் நல்ல தரத்தில் உள்ளதா?
- தரக் கட்டுப்பாட்டுக் கொள்கைகள் உற்பத்தித் திறன் கொண்டவையா?
- தொழிநுட்ப திறன்கள் உள்ளதா?

6. ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி

நிறுவனத் தந்திரோபாயத்தை உருவாக்குவதில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி மற்றுமொரு உள்ளக காரணியாகும். பின்வரும் விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன.

- நிறுவனத்தில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவு உள்ளதா?
- இந்த பிரிவின் ஊழியர்கள் திறமையானவர்களா?
- அந்த பிரிவில் போதுமான வளங்கள் உள்ளதா?
- அந்த அலகுடன் அது தொடர்பு கொள்ளப்படுகிறதா?

7. தகவல் முறைமை முகாமைத்துவம்

இதன் கீழ் முக்கியமாக கவனிக்க வேண்டியவை பின்வருமாறு.

- தீர்மானமெடுத்தல் செயற்பாட்டில் அனைத்து முகாமையாளர்களும் தகவல் முறைமையை பயன்படுத்துகிறார்களா?
- தகவல்களை நிர்வகிக்க ஏதேனும் முகாமையாளர்கள் காணப்படுகின்றனரா?
- தகவல் முறைமையின் பயன்பாடு புதுப்பிக்கப்பட்டுள்ளதா?
- தொடர்ச்சியான பயிற்சி வழங்கப்படுகிறதா?
- தகவல்களை எளிதாகப் பெற்று கொள்ள முடியுமா?

(மூன்று காரணிகள் மாத்திரம் எதிர்பார்க்கப்படுகிறது)

(05 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

பிரிவு C முடிவு

aat SRI LANKA

Notice:

These answers compiled and issued by the Education and Training Division of AAT Sri Lanka constitute part and parcel of study material for AAT students.
These should be understood as Suggested Answers to question set at AAT Examinations and should not be construed as the "Only" answers, or, for that matter even as "Model Answers". The fundamental objective of this publication is to add completeness to its series of study texts, designs especially for the benefit of those students who are engaged in self-studies. These are intended to assist them with the exploration of the relevant subject matter and further enhance their understanding as well as stay relevant in the art of answering questions at examination level.

SRI LANKA

© 2021 by the Association of Accounting Technicians of Sri Lanka (AAT Sri Lanka). All rights reserved. No part of this document may be reproduced or transmitted in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise without prior written permission of the Association of Accounting Technicians of Sri Lanka (AAT Sri Lanka)